# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 13, 2021 Weekly E-paper • February 13, 2021



## எது வேண்டும் நமக்கு?

## தலையாட்டும் அரசா? தன்மான அரசா?

சுப. வீரபாண்டியன்

**குறுக்கு வழியில் வரும் குள்ள நரிக் கூட்டம்**

மா.உதயகுமார்

**மனித உரிமை - காதல்**

தலையங்கம்

**பெண் விடுதலை வரலாற்றின் பொன்னெழுத்து “பெரியார்”**

நேர்காணல்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • பிப்ரவரி 13, 2021 Weekly E-paper • February 13, 2021


# எது வேண்டும் நமக்கு?

## தலையாட்டும் அரசா? தன்மான அரசா?

• சுப. வீரபாண்டியன் •

நாளேடுகளைத் திறந்தால், “வெற்றிநடை போடுகிறது தமிழகம்”. ஆனால் நடைமுறையிலோ, “தடுப்பணைகள் இடிந்து விழும் தமிழகம்” என்ற நிலையே உள்ளது!

தமிழ்நாடு கடனில் தத்தளிக்கிறது. 4.56 இலட்சம் கோடி ரூபாயாகத் தமிழ்நாட்டின் கடன் உயர்ந்துள்ளது. இந்த ஒன்றைத் தவிர, மற்ற எல்லாம் தாழ்ந்தே நிற்கிறது. ஆனால் முதல்வர் பழனிச்சாமியோ, தேர்தல் வருவதால், புதிய புதிய திட்டங்களை அறிவித்துக் கொண்டே இருக்கிறார்.

அண்மையில், விவசாயிகளுக்கானப் பயிர்க் கடன் ரத்து என்று அறிவித்துள்ளார். எப்போதும் அறிவிக்கப்படும் திட்டம் எவ்வளவு முதன்மையானதோ, அதே அளவிற்கு அறிவிக்கப்படும் நேரமும் முதன்மையானது. தலைவர் கலைஞர் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், விவசாயிகளின் 6670 கோடி ரூபாய்க் கடனைத் தள்ளுபடி செய்தார். இவரோ, ஆட்சியை விட்டுப் போகும் வேளையில் கடன் தள்ளுபடி என்கிறார்.

ஆட்சிக்கு வந்ததும் அறிவிக்கும் திட்டங்களுக்கு அந்த அரசாங்கமே முழுப் பொறுப்பு. இவ்வளவு தள்ளுபடி செய்கிறோம் என்றால், அதற்கான வருமானம் என்ன என்று பார்க்க வேண்டியிருக்கும். ஆனால், போகும் நேரத்தில் அறிவித்தால், அடுத்து வரும் அரசே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இன்றைய முதல்வருக்கு ஒன்று நன்றாகத் தெரியும் - அடுத்த முதல்வர் தான் இல்லை என்பது! அதனால்தான் வாக்குறுதிகளை அள்ளித் தெளிக்கிறார்.

எந்த வளர்ச்சியும் தமிழகத்தில் இப்போது இல்லை என்பதுடன், தமிழக அரசுக்கென்று ஒரு தன்மானமும் இல்லாமல் போய்விட்டது. எழுவர் விடுதலையில் என்ன நடந்தது என்று நாடே பார்த்தது.



கடந்த 29 ஆம் தேதி தமிழக முதல்வர் ஆளுநரைச் சந்தித்து, மனு அளிக்கிறார். ஆனால் ஆளுநரோ, 25 ஆம் தேதியே மத்திய அரசுக்கு எதிர்நிலையில் கடிதம் எழுதிவிட்ட செய்தியை முதல்வருக்குத் தெரிவிக்கவில்லை. இவ்வளவுதான் இன்றைய அரசுக்கு, மத்திய அரசு தரும் மதிப்பு!

வி.பி.சிங் அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்தபோது, கலைஞரின் வேண்டுகோளை ஏற்று, சென்னை, உள்நாட்டு விமான நிலையத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணா பெயரையும் சூட்டினார். இன்றைய மத்திய அரசு இருபெரும் தலைவர்களின் பெயர்களையும் நீக்கிவிட்டது.ஏன் என்று கேட்பதற்கும் இங்கு நாதிஇல்லை.

தில்லி அரசு எதனைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அதற்குத் தலையாட்டும் ஓர் அரசுதான் இப்போது தமிழ்நாட்டில் உள்ளது. இது தமிழகத்திற்கே அவமானம்! நீட் தேர்வைத் தடுப்போம் என்று சொல்கிற, புதிய ஓய்வூதியத் திட்டத்தை நீக்குவோம் என்று சொல்கிற, மாநில சுயாட்சிக்குக் குரல் கொடுப்போம் என்று சொல்கிற தன்மானமுள்ள அரசே இன்றைய உடனடித் தேவை என்று சொல்லலாம்.

அப்படி ஓர் அரசைத் தருவோம் என்று திமுக தலைவர் தளபதி சொல்கிறார். மக்களும் நம்புகின்றனர். ஆனால் முதல்வர் பழனிச்சாமி சொல்வதை இந்தத் தேர்தல் நேரத்திலேயே மக்கள் நம்பவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான், நேற்றைய நிகழ்வு! முதல்வர் பேசிக்கொண்டிருக்கும்போதே, மக்கள் கலைந்து செல்கின்றனர். சோர்ந்துபோன முதல்வர், பேச்சை நிறுத்திக் கொண்டு புறப்படுகிறார்.

மக்கள் முன்னால் இருக்கும் கேள்வி இதுதான்! நமக்கு எது வேண்டும்? தலையாட்டும் அரசா, இல்லை தன்மான அரசா? சரியான விடைதரத் தமிழகம் காத்திருக்கிறது! •



# குறுக்கு வழியில் வரும் குள்ள நரிக் கூட்டம்

மா.உதயகுமார்

கல்வியும் அதிகாரமும் மறுக்கப்பட்டு நூற்றுக்கு மூன்று சதவீதம் மட்டுமே இருக்கும் பார்ப்பனர்கள் அனைத்து அதிகாரங்களிலும் ஈராயிரம் ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வரும் அவலநிலை இங்கு இருந்துவருகிறது. ஒரு நூற்றாண்டிற்கு முன்னர்தான் இடஒதுக்கீட்டிற்கானக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. சரியாகச் சொல்ல வேண்டுமானால் இடஒதுக்கீடு என்பது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே திராவிட இயக்கம் முன்வைக்கும் சமூகநீதி. தமிழ்நாட்டில் மட்டும்தான் 69 சதவிகிதம் இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்கிறது. மத்திய அரசில் 49.5 சதவிகிதம் தான் இருக்கிறது. மத்திய அரசின் கல்வி வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு என்பதற்கான நெடிய போராட்டத்தைத் தொடர்ந்து 1990இல் மண்டல் குழுவின் பரிந்துரை, சமூகநீதிக்காவலர் வி.பி.சிங் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது நாடு முழுதும் கலவரத்தைத் தூண்டிவிட்டார்கள், இரதயாத்திரை நடத்தினார்கள் பார்ப்பனிய சங் பரிவாரங்கள். தொடர்ந்து இந்திரா சகானி வழக்கு என பல்வேறு தடைகளையும் தாண்டி 50 சதவிகித இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆன நிலையிலும் இந்த இடஒதுக்கீடு என்பது முறையாகப் பின்பற்றப்படாமல் மிகக் குறைந்த அளவிலேயே பார்ப்பனரல்லாத மக்களைச் சென்றடைந்திருக்கிறது. இதனை அண்மையில் தகவல் அறியும் சட்டம் மூலம் பெறப்பட்டப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

**FROM GOVT DEPARTMENTS TO RLYS, HRD TO NITI AAYOG**

Quota representation of Group A and Group B officers

| GOVT | TOTAL | SC | ST | OBC | GENERAL |
|---|---|---|---|---|---|
| Railways | 16,381 | 2,551 (15.57%) | 1,238 (7.56%) | 1,319 (8.05%) | 11,273 (68.82%) |
| 71 departments | 3,43,777 | 52,487 (15.27%) | 23,488 (6.83%) | 51,384 (14.94%) | 2,16,408 (62.95%) |
| HRD Ministry* | 665 | 126 (18.94%) | 43 (6.47%) | 56 (8.42%) | 440 (66.17%) |
| Cabinet Secretariat | 162 | 15 (9.26%) | 2 (1.23%) | 15 (9.26%) | 130 (80.25%) |
| Niti Aayog | 344 | 47 (13.66%) | 17 (4.94%) | 26 (7.56%) | 254 (73.84%) |
| President's Secretariat | 130 | 18 (13.85%) | 5 (3.85%) | 10 (7.69%) | 97 (74.62%) |
| Vice President's Secretariat | 13 | 2 (15.38%) | 0 | 1 (7.69%) | 10 (76.92%) |
| UPSC | 105 | 20 (19.05%) | 5 (4.76%) | 12 (11.43%) | 68 (64.76%) |
| CAG | 31,115 | 5,369 (17.26%) | 2,411 (7.75%) | 2,563 (8.24%) | 20,782 (66.79%) |

Source: Data provided by DoPT, MoHRD, Railways to The Indian Express under RTI * Includes subordinate/attached offices

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்

**Lagging in numbers**

Percentage of OBC employees under various groups in the 24 Ministries and in the 57 ministries/departments/constitutional bodies cumulatively as on January 1, 2017

| Type | Percentage of OBC employees in 24 Ministries | Percentage of OBC employees in 57 Ministries/departments/ constitutional bodies |
|---|---|---|
| Group A | 17% | 14% |
| Group B | 14% | 15% |
| Group C | 11% | 17% |
| Group D | 10% | 18% |

நன்றி: தி இந்து

இடஒதுக்கீடு என்பது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமாக முறையாக அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்கும் வகையில் கொண்டு செல்லப்பட வேண்டிய நிலையில், இருக்கின்ற இடஒதுக்கீட்டையும் குழிதோண்டிப் புதைக்கும் வேலையைப் பார்ப்பனிய பாஜக அரசு தொடர்ந்து செய்து வருகிறது. ஏனெனில் மனு (அ)நீதி சமூகநீதிக்கு எதிரானது.

பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் தனியார் துறைக்கு விற்பதன் மூலம் சமூக நீதி சிதைக்கப்படுகிறது. தொழில் வணிகம் செய்வது அரசின் நோக்கமல்ல என்று காரணம் சொல்லி, தொழில் உற்பத்தித் துறையில் இருந்துவந்த கொஞ்சநஞ்சப் பிரதிநிதித்துவத்தையும் பறித்துவிட்டனர். நிர்வாகம் மட்டும் அரசிடம் இருக்கும் இந்த நிலையிலும் இடஒதுக்கீடு என்பதைத் தகர்ப்பதற்கானப் பணியைத் தொடங்கி இருக்கிறார்கள். அதுதான் தனியார் துறையில் இருந்து வரக்கூடியவர்களை மத்திய அரசின் முதன்மையானத் துறைகளுக்குக் கூட்டுச் செயலாளர்களாக நேரடியாக நியமனம் செய்யும் அறிவிப்பு.

இந்தத் துறைகளின் செயலாளர்கள் எல்லாம் IAS, IPS, IFS, IRS போன்ற சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் சமூகநீதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றி, படிப்படியாக உயர்பதவி பெறுவார்கள். இந்த முறையை அப்படியே அப்புறப்படுத்திவிட்டு தனியார் துறைகளில் இருந்து நிபுணர்கள் என்ற பெயரில் மத்திய அரசு நேரடியாகக் கூட்டுச் செயலாளர்களை நியமிப்பது அரசமைப்புச் சட்டப்படியும் ஏற்கத்தக்கதல்ல சமூகநீதி அடிப்படையிலும் ஏற்கத்தக்கதல்ல.

சமூக நீதி என்பது அனைத்துத் தளங்களிலும் நிலைநாட்டப்பட வேண்டிய மாபெரும் பயணத்தில் இன்னும் பாதித் தொலைவு கூட வராத நிலையில் வழியில் பாறாங்கற்களைப் போட்டிருக்கிறார்கள் பார்ப்பனிய பாஜகவினர். எப்போதும் இவர்களால் உழைப்பால் முன்னேற முடிவதில்லை. அனைத்து இடங்களிலும் இடஒதுக்கீட்டைத் தங்களுக்கென உறுதி செய்துகொள்பவர்கள் முதலில் இவர்கள்தான். மற்றவர்களெல்லாம் இடஒதுக்கீட்டின் மூலம் வந்தாலும் ஒரு போட்டியைச் சந்தித்து அதன் மூலம் தேர்வு பெற்றுத்தான் வருகிறார்கள். ஆனால் போட்டியைத் தவிர்த்துவிட்டு நேரடியாகத் தங்களுக்கான இடங்களைப் பிடித்துக் கொள்வது, ஈராயிரம் ஆண்டுகளாக, பார்ப்பனர்கள் மட்டும்தான். உண்மையில் இவர்கள் போட்டியைக் கண்டு அஞ்சுபவர்கள். ஆகையினாலேதான் இவர்கள் மற்றவர்களுக்குக் கல்வியை மறுத்திருக்கிறார்கள். அறமற்றவர்கள். நேர்மையற்றவர்கள்.

ஏன் தனியார் துறைகளில் இருந்து ஆட்களை அல்லது நிபுணர்களை மத்திய அரசு நிர்வாகத்திற்குக் கொண்டு வரவேண்டும்? இந்தியாவின் சர்வீஸ் கமிஷன் கொடுக்கும் நிர்வாகப்பயிற்சியைவிட எந்த தனியார் நிறுவனம் நல்ல பயிற்சியைக் கொடுத்திருக்கிறது? இந்த தனியார் நிறுவனங்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு, ஒருவர் காலை ஒருவர் வாரி முன்னேற, கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்கான வழிகளைத்தான் இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றன. இவர்கள் அரசு நிர்வாகத்திற்கு வந்தால் மக்களின் நிலை என்னாகும்?

2019-ல் இதேபோல் தனியார் துறையில் இருப்பவர்கள் 9 பேரைப் பல்வேறு துறைகளுக்குக் கூடுதல் செயலாளர்களாக மத்திய அரசு நியமித்தது.குறிப்பிடத்தக்க நியமனங்கள்:

*Kakoli Ghosh (Ministry of Agriculture), Amber Dubey (Civil Aviation), Arun Goel (Commerce), Rajeev Saksena (Economic Affairs), Sujit Kumar Bajpayee (Environment, Forests).*

இவர்கள் பெயரைப் பார்த்தாலே இவர்கள் எல்லாம் யார் என்பது நமக்கு விளங்குகிறது. ஒவ்வொருவர் நியமனத்திற்குப் பின்னரும் பல்வேறு சர்ச்சைகள் இருக்கின்றன. இவர்களெல்லாம் பணமோசடி வழக்குகளில் தொடர்புடையவர்கள், இடைத்தரகர்கள், மூத்த IAS அதிகாரிகளைவிட குறைவானப் பணி அனுபவம் கொண்டவர்கள். நேரடியாகத் தங்களுக்கு விருப்பம் உள்ளவர்களையம் தங்கள் சொற்படி நடப்பவர்களையும் கையெழுத்துப் போடுபவர்களையும் தேர்வு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இதே போல் 30 பேரை நியமனம் செய்ய இருக்கிறார்கள்.

வர்ணாஸ்ரம தர்மத்தை நோக்கித்தான் நேரடியாக அவர்கள் தங்கள் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள மக்கள் இந்த ஆபத்தை உணர்ந்து, பெரியார் வழியில் சமூக நீதிக்கானப் போராட்டத்தில் பார்ப்பனரல்லாத மக்களாக ஒன்றுதிரண்டு ஆர்.எஸ்.எஸ்-பாஜகவிற்கு எதிராக நின்றிட வேண்டும். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மனித உரிமை – காதல்

உலக இயற்கை, உயிர் இயற்கை – 'காதல்'. திருமணம் என்கிற அமைப்பு கட்டமைக்கப்பட்ட பின்னர் இணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குடும்ப அமைப்பு பெற்றுவிட்டது. உயிரினங்களில் மனித இனத்திற்கு மட்டும்தான் இந்த உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

மதங்கள், திருமணம் குடும்பம் ஆகிய அமைப்புகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றன. எந்த மதமும் காதலை அங்கீகரிப்பதில்லை. இதில் பெரிதும் உரிமைகள் பறிக்கப்படுவது பெண்ணிற்குத்தான். ஆண்களால் உருவாக்கப்பட்ட மதங்கள் பெண்ணுக்கான வாழ்வுரிமையை மறுக்கின்றன. அடிப்படையில் காதல் உரிமை பெற்றாலெ பெண்களுக்கான சமஉரிமை கிடைத்துவிடும். இந்தியாவில் பார்ப்பனீயம் வர்ணாசிரம தர்மத்தை சாதிய அமைப்பை நிலைநிறுத்தத் தொடர்ந்து காதலுக்கு எதிராக காதலர்களுக்கு எதிராக வன்முறை செய்துவருகிறது. அண்மைக் காலங்களில் காதலுக்கு எதிரான சட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறது. கலாச்சாரக் காவலர்கள் என்கிற பெயரில் மதவாதிகள், உலா வரும் காதலர்களை விரட்டியடிக்கிறார்கள்.



"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்கிற குறுந்தொகைப்பாடல் இனம், மொழி, மதம், ஜாதி, பாலினம் என்கிற வேறுபாடுகளையெல்லாம் கடந்து மலரும் காதலை உலகிற்கு உரைக்கிறது. மேலை நாடுகளில் காதல் என்பது கொண்டாட்டத்திற்கு உரியதாக இருக்கிறது. ஆனால் இந்தியாவில் காதல் தண்டனைக்குரியதாக இருக்கிறது.

காதல் அடிப்படை மனித உரிமை. மனித உரிமை மறுக்கப்படும் சமூகம் மனிதத் தன்மை அற்றதாக மாறிவிடும். காதல் நிறைந்த உலகத்தில் அன்பும் மனித நேயமும் மலர்ந்திருக்கும். வன்முறையும் கலவரமும் உலர்ந்திருக்கும். காதலைப் போற்றுவதற்கு நேரமும் நாளும் பார்க்கவேண்டிய தேவை இல்லை என்றாலும் தடைகள் நிறைந்திருக்கும் சமூகத்தில் காதலர் தினத்தை அனைவரும் கொண்டாடுவோம். ●

# ஐயா தந்தை பெரியாருக்கு யுனெஸ்கோ விருது

## ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தரும் சான்று!



சென்னை ராஜாஜி மண்டபத்தில் 27.6.1970 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மத்திய அமைச்சர் திரிகுண சென்தான் அய்.நா.வின் யுனெஸ்கோ சார்பில் தந்தை பெரியாருக்கு விருது வழங்கினார் என்பது உலகறிந்த தகவலாகும்.

"Periyar, the Prophet of the New Age;
The Socrates of South East Asia;
Father of the Social Reform Movement;
And Arch Enemy of Ignorance,
Superstitions, Meaningless Customs and Base Manners"

புது உலக தீர்க்கதரிசி, தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ், சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமை, மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிர தாயம், இழிந்த வழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி"

என்ற வாசகங்களும் அந்த விருதில் பொறிக்கப் பட்டு இருந்தன.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள நூல் Atheism and Secularity என்பதாகும். Phic Zucker Man (தொகுதி 1 ) என்பவரால் எழுதப்பட்டதாகும். அந்த நூலின் 142 ஆம் பக்கம் இவ்வாறு கூறுகிறது.

The United Nations Educational Scientific and Cultural Organization (UNESCO) eventually gave an award to Periyar, and the Union Education Minister Triguna Sen, in Madras (Chennai), on June 27, 1970. The citation hailed Periyar as "the Prophet of the New Age, the Socrates of South East Asia, Father of Social Reform Movement, and Arch enemy of ignorance, superstitions, meaningless customs and bas manners" என்று வெளிவந்துள்ளது.

பார்ப்பனர்கள் நினைத்தால் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் ஆசாமிகளை எல்லாம் ஜெகத்குரு' என்பார்கள். கொலைக் குற்றத்தில் ஜெயிலுக்குப் போன பேர்வழியென்றாலும் ஜெகத்குரு' என்பதில் மாற்றுக் குறையாமல் கூவுவார்கள்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை – 600 024,தொலைபேசி: 044-2472 6408

# பெண் விடுதலை வரலாற்றின் பொன்னெழுத்து "பெரியார்"

முனைவர் சுந்தரவள்ளி, துணைச் செயலாளர், தமுஎகச



**முதலாளித்துவமும் பார்ப்பனியமும் கைகோர்த்துள்ள இன்றைய சூழ்நிலையில் மார்க்சியத்தின் தேவை அதிகமாக உள்ளது. மார்க்சியம் சித்தாந்த ரீதியாகப் பொது மக்களைச் சென்றடைய நீங்கள் முன்வைக்கும் செயல்திட்டங்கள் என்ன? உங்களது முன்னெடுப்புகள் என்ன?**

டாக்டர் அம்பேத்கர் பேசுகிறபோது சொல்வார், "நமக்கு இரண்டு எதிரிகள் இருக்கிறார்கள்; ஒன்று பார்ப்பனியம், இன்னொன்று முதலாளித்துவம்" என்று. சாமானியர்களுக்கு எதிரானது பார்ப்பனியம் மட்டுமன்று, முதலாளித்துவமும் சாமானியர்களுக்கு எதிரானது. தனக்குக் கீழே ஒரு சமூகத்தை வைத்திருக்க வேண்டும் என்று சொல்வது. அம்பேத்கரின் பேரன் ஆனந்த் டெல்டும்டே இப்படிச் சொல்வார், "பவுத்தம் கைவிடுகிறபோது கடைசிப் புகலிடமாக மார்க்சியம் இருக்கும்". மார்க்சிய சித்தாந்தம் உலகச் சித்தாந்தம். சாமானிய பாட்டாளிகளுக்கான சித்தாந்தம். பாட்டாளி மக்களின் விடுதலைக்கான சித்தாந்தம்.

இதை உயர்த்திப் பிடிப்பதற்கான வேலைகளை மார்க்சிஸ்டுகள் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள். பெரும் முதலாளிகளின் நிலத்தை எடுத்துச் சாமானியர்களுக்குக் கொடுப்பது என்பதிலிருந்து சாதி எதிர்ப்பைக் கையில் எடுப்பது உள்ளிட்ட அனைத்தையும் செய்து வந்திருக்கிறார்கள். தீண்டாமைக்கு எதிராக மிகப்பெரிய சமர் செய்திருக்கிறார்கள். சமரசமில்லாமல் மக்களுக்கான போராட்டத் தலைவர்களாக மார்க்சிஸ்டுகள் இருந்திருக்கிறார்கள். அது விலைவாசியாக இருந்தாலும், கல்வி உரிமையாக இருந்தாலும், சுயாட்சியாக இருந்தாலும் அதைக் கையில் எடுத்தவர்களாக மார்க்சிஸ்டுகள் இருந்தார்கள், இருக்கிறார்கள். இன்றும்கூட டெல்லியில் நடக்கும் விவசாயிகள் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் சக்தியாக மார்க்சிஸ்டுகள் இருக்கிறார்கள்.

சித்தாந்தம் தெளிவாக இருக்கிறது. அதன் அடிப்படையில் அதிகார வர்க்கத்திற்கு எதிராக, உழைக்கும் வர்க்கத்தை ஒருங்கிணைக்கும் வேலையையும் மார்க்சிஸ்டுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதில் முன்னேறிப் போக வேண்டிய அவசியம் இருக்கிறது.

**மக்களின் வாழ்வாதாரம் சார்ந்த எந்தெந்தப் பிரச்சினைகளை முன்வைத்து வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் உங்களது பிரச்சாரம் இருக்கும்?**

இந்திய ஒன்றியத்தில் ஏராளமான இனக்குழுக்கள் வாழ்ந்து வருகிறோம். ஏராளமான அடையாளங்களோடு வாழ்கிறோம். ஒவ்வொருவருக்குமானத் தனிச்சிறப்பான அடையாளங்கள் இருக்கின்றன. ஆனால் இன்று ஆர்எஸ்எஸ்- பிஜேபி-சங்பரிவார் கும்பல் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த அடையாளங்களை அழித்தொழிக்கும் வேலையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இனக்குழுக்களின் மொழி, பண்பாடு, கல்வி, சுயாட்சி உள்ளிட்ட எல்லா உரிமைகளையும் பறிக்கிற வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகமும் இதே காலகட்டத்தில் எல்லா உரிமைகளையும் இழந்து நிற்கிறது. கல்வி உரிமை, இடஒதுக்கீடு ஆகியவை பறிக்கப்பட்டுள்ளன. இடஒதுக்கீட்டில் அரியவகை ஏழைகளுக்கான 10 விழுக்காடு மூலம் பார்ப்பனர்களுக்கான இடத்தைத் தக்க வைக்கப் பார்க்கிறார்கள். சிறுபான்மை மக்கள் சொந்த நிலத்தில் அகதிகளாக நடத்தப்படுகிறார்கள்.

புலம்பெயர் தொழிலாளர்கள் இரண்டு வேளை சாப்பாட்டுக்காகக் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் ஒரு நாடு, ஒரு பண்பாடு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் என்று பார்ப்பனக் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் திணிக்க நினைக்கும் இவர்களுக்கு எதிராக, புறக்கணிக்கப்பட்டவர்களை ஒருங்கிணைக்கும் வேலையைச் செய்யவேண்டும். இவற்றை மக்கள் மன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும்.

**இந்திய அளவில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவீனமடைந்து இருப்பதற்கான காரணங்களாக நீங்கள் கருதுபவை என்ன? அதன் வலிமையை மீட்டெடுப்பதற்கான உங்கள் செயல்திட்டங்கள் என்ன?**

இந்திய அளவில் கம்யூனிஸ்டுகள் பலவீனம் அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லமாட்டேன்; ஒரு பின்னடைவைச் சந்தித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு மதவாதமும் சாதியமும் பெருமுதலாளித்துவமும் கைகோர்த்து நிற்கும் சூழல் இருக்கிறது. இதை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தச் சூழலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் என்ன செய்தோம் என்பதை கம்யூனிஸ்டுகள் மக்களுக்குச் சொல்லவில்லை. தந்தை பெரியார் போல சமகால வரலாற்றைப் பதிவு செய்யாதது ஒரு தொய்வு.

கார்ப்பரேட்டுகளை எதிர்க்கக் களத்தில் நின்று அடிக்க வேண்டிய சூழல் உருவாகி இருக்கிறது.

எதிரி ஒரு ஆயுதத்தைக் கையில் எடுக்கிறான் என்றால் அந்த ஆயுதத்தை வீழ்த்துகிற இன்னொரு ஆயுதத்தைக் கம்யூனிஸ்டுகள் கையிலெடுக்க வேண்டும். இதைக் கம்யூனிஸ்டுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். கம்யூனிஸ்டுகள் பொறுப்புக்கு வந்தால் மக்களுக்காகப் போராடுபவர்களாக இருப்பவர்கள். இதற்கு பாலபாரதி, சு. வெங்கடேசன் போன்றவர்கள் உதாரணம். இதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

வெறும் அரசியல் செயல்திட்டம் மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கான செயல் திட்டத்தையும் கையில் எடுக்க வேண்டும். இன்று வாட்ஸ் அப், ஃபேஸ்புக் என்று ஆயிரம் விஷயங்கள் இருக்கலாம். ஆனால் அன்று மக்களை முகம் பார்த்துப் பேசிய இடங்களை நாம் உருவாக்கி வைத்திருந்தோம். அன்று இயங்கிய படிப்பகங்கள், இரவுப் பள்ளிக்கூடங்கள், வீதிதோறும் நூலகங்கள் இன்று இல்லாமல் போய்விட்டன.

மக்களை அரசியல்படுத்த இவையெல்லாம் அவசியமானவை. இதையெல்லாம் கையிலெடுத்து அறிவைக் கூர்தீட்ட வேண்டும்.

## பெண்கள் பொது வாழ்விற்கு வருவதற்குத் தடையாக இன்னும் இருப்பவை என்று நீங்கள் கருதுபவை என்னென்ன? பெரியாரின் பங்களிப்பு தமிழகத்தின் சூழலை மாற்றி உள்ளதா?

பெண்கள் பொதுவாழ்க்கைக்கு வருவதற்குத் தடையாக இருப்பது இங்கிருக்கும் பண்பாடும், கலாச்சாரக் கூறுகளும், சாதியும், மதமும். சாதியும், மதமும் பண்பாட்டின் மையப்புள்ளியாக இருக்கின்றன. இந்த மையப்புள்ளி அதிகாரமாக இருக்கிறது. இந்த அதிகாரம் பெண்களை இரண்டாம்பட்சமாக வைத்திருக்கிறது. இப்படி வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் வெறும் பாலியல் பண்டங்களாக, வீட்டில் குழந்தைகளை வளர்க்கும் ஒரு ஆயாவாக, வீட்டிற்குள் அடிமையாக இருக்கும்படியாக மீண்டும் மீண்டும் போதிக்கப்படுகிறார்கள்.

இயற்கையாகவே பெண்கள் விபச்சார தோஷமுள்ளவர்கள் என்கிறது மனுஸ்மிருதி. இந்த விஷயங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக மூளைக்குள் திணிக்கப்பட்டு ஒரு பொதுச் சமூகம் உருவாகியிருக்கிறது. சாதி மதம் என்ற நிறுவனங்களை உயர்த்திப் பிடிக்கிற நிறுவனமாகவும், அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் நிறுவனமாகவும் குடும்ப அமைப்புகள் இருக்கின்றன. குடும்பம் பெண்களை என்றைக்குமே இரண்டாம்பட்சமாகத் தான் பார்க்கிறது. முடிவெடுக்கும் இடத்தில் ஆண்தான் இருக்கிறான்.

கல்வி நிலையங்கள்தான் மாற்றத்திற்கானக் கருவிகளாக இருக்கவேண்டும். ஆனால் கெடுவாய்ப்பாக, பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கிச் சுமக்கிற ஒரு மீடியமாகத்தான் கல்வி நிலையங்கள் இருக்கின்றன.

இந்த எல்லாவற்றையும் உடைத்து அடிப்படையானவற்றைக் காலி செய்கிற பொறுப்பு முற்போக்காளர்களுக்கு இருக்கிறது. அந்த வேலையைத்தான் தந்தை பெரியார் கையிலெடுத்துச் செய்தார். பிற்போக்குச் சனாதன சமூகம் பெண்களுக்கான வரையறையை உருவாக்கி வைத்தபோது பெரியார்தான் அவற்றை உடைத்தார். பெண்களின் கையில் இருக்கும் கரண்டியைத் தூக்கி எறிந்து விட்டுப் புத்தகத்தை கொடுங்கள் என்றார் பெரியார்.

பெண் விடுதலைக்குத் தீர்வாக பெரியார் முன் வைக்கும் ஒரே விஷயம் கல்வி. பெண்களுக்குக் கொடுக்கப்படும் கல்வி ஒரு சமூக மாற்றத்திற்கான கல்வி என்பதில் தெளிவாக இருந்தார். ஆண்களை நம்பிப் பெண் விடுதலை இல்லை என்றும் கற்றுக் கொடுத்தார்.

எனக்குத் தெரிந்து, உலகத் தலைவர்களில், ஆண்மை ஒழியாமல் பெண்களுக்கு விடுதலை சாத்தியமில்லை என்று சொன்னவர் தந்தை பெரியார் மட்டும்தான். அவரது தொடர்ச்சியாக, அந்த நூல் அறுந்து போகாமல், அவருக்குப்பின் வந்த திராவிட இயக்கங்களின் அரசியல் வாயிலாக அவருடைய தீர்மானங்கள் சட்டமாக்கப்பட்டன.

இன்றைக்கு இந்தியாவிலேயே பெண்கள் விடுதலை சார்ந்து மிகவும் காத்திரமான அரசியல் பேசுகிற ஒரு சூழலுக்குத் தமிழகத்தைக் கொண்டுவந்து நிறுத்தியிருப்பது தந்தை பெரியார் போன்றவர்களின் முயற்சியே. அதைத்தான் சிங்காரவேலரும் செய்தார். டாக்டர் அம்பேத்கரும் செய்தார். தந்தை பெரியார் என்ற பெயர் பெண்களின் விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு பெயர்.

**– நேர்காணல் : வெற்றிச் செல்வன்**




*நன்றி:* தினகரன் நாளிதழ்

### விழா தேதி மாற்றம்!

**இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத் தொடக்க விழாவும், திரு. ஆ.இராசாவின் நூல் அறிமுக விழாவும் 22-02-2021 திங்கள் மாலை 6 மணிக்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளது.**

– சுப.வீரபாண்டியன்




Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,